# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 1438/2022

Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.மாரிச்சாமி | Caste: | |
| Father's Name | : பெரியகருப்பன் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

11.07.2025 – 04.00 PM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>சாட்சி கு.வி.மு.ச பிரிவு 311–ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையின் போதும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தார்கள். என்னை போலீசார் வீட்டில் வைத்தும், பெருநாழி காவல் நிலையத்தில் வைத்தும் விசாரித்தார்கள். என்னை போலீசார் விசாரித்தபோது காலை 10.00 மணி இருக்கும்.

2. என்னை விசாரித்தபோது நானும், எனது மனைவி செல்லம்மாளும் மட்டுமே இருந்தோம். அ.சா.1 எனது சித்தப்பாவின் மகள். எனக்கு அக்கா உறவு முறை ஆவார். அ.சா.1 அளித்த புகாரில் என்ன விபரங்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் நான் படிக்காதவன், அதனால் எனக்கு தெரியாது. அதே காவல் நிலையத்தில் என் வீட்டை முத்துமுருகன் இடித்துவிட்டதாக புகார் அளித்தேன். அந்த வழக்கு தான் இந்த வழக்கு ஆகும். அந்த இடம் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் புறம்போக்காக தான் இருந்தது. பிற்பாடு யார் பெயரில் பட்டா ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

3. பிரச்சனைக்கு பின்னதாக சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது

என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இது சம்மந்தமாக வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்கள் வழக்கறிஞரிடம் கூறியுள்ளோம். வழக்கறிஞர் வழக்கு தாக்கல் செய்தாரா என்று கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிற சமயத்தில் எங்கு வேலைக்கு சென்றிருந்தேன் என்றால் முத்துசெல்லையாபுரம் கிராமத்திற்கு வேலைக்கு சென்றிருந்தேன். வேலை முடிந்து மாலை 05.30 மணிக்கு வீட்டிற்கு வந்தேன்.

4. சம்பவ இடத்திற்கு தெற்கே காலனிக்கு போகும் பாதை உள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டிற்கு தெற்கே எனது வீடு உள்ளது என்றால் சரியல்ல. அந்த ரோட்டிற்கு வடபுறம் தான் உள்ளது. காலனிக்கு போகும் பாதைக்கு தெற்கே கருப்பசாமி மற்றும் அருணாச்சலம் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது. அதற்கு பின்பு முத்துலெட்சுமியின் இடம் உள்ளது என்றால் தெரியவில்லை. சம்பவ இடத்திற்கு மேற்கே ஊரணி உள்ளது. கிழக்கே சிவபெருமாள் என்பவரது இடம் உள்ளது. எனது வீட்டிலிருந்து கொஞ்சம் தூரத்தில் பள்ளி உள்ளது.

5. நான் இப்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் பெருமாள் என்பவர் கொஞ்சம் இடம் கொடுத்துள்ளார். அதில் தார்பாய் போட்டு குடிசை போட்டு குடியிருந்து வருகிறேன். போலீசார் என்னை சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்த பின்பு மீண்டும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் வேலை முடிந்து வந்த போது சம்பவ இடத்தில் அண்ணாச்சி நாராயணன் மட்டும் இருந்தார். மறுநாள் சம்பவ இடத்திற்கு போலீசார் வந்து புகைப்படம் எடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள்.

6. சம்பவ இடத்திற்கு சம்பவத்திற்கு மறுநாள் நாராயணன் வரவில்லை. முத்துக்கருப்பன் மட்டும் வந்தார். மேற்படி நாராயணன்

மற்றும் முத்துக்கருப்பனை சம்பவ இடத்தில் வைத்து விசாரிக்கவில்லை. காவல் நிலையத்தில் வைத்துதான் விசாரித்தார்கள். அவர்கள் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்தார்கள். பாலின் ராணி எனக்கு சித்தப்பாவின் மகள். தங்கை முறை வேண்டும். அவர் விழுப்புரத்தில் குடியிருந்து வருகிறார்.

7. எங்கள் ஊரில் கருப்பசாமி மகன் சங்கிலிமுருகன், முனியாண்டி மகன் முனியசாமி ஆகியோர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எனக்கு சொந்தம் கிடையாது. ஆனால் தெரிந்தவர்கள். பாலமுருகனும் தெரிந்தவர்தான். எனக்கு சம்பவம் குறித்து போன் மூலம் யாரும் தகவல் அளிக்கவில்லை. நான் வந்த பிறகு தான் எனக்கு தெரியும். தற்போது இடத்திற்குரிய பட்டா முத்துமுருகன் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பிரச்சனைக்குரிய இடத்தை முத்துமுருகன் என்பவர் தெய்வச்சீலை என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனது தாத்தா பெரிய கருப்பன் பெயரில் மூலப்பத்திரம் உள்ளது. அதை வைத்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். போலீசாரிடம் மூல பத்திரத்தையும் காண்பித்து மேற்படி விபரங்களையும் கூறியுள்ளேன். நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், நான் கூறியபடி வழக்கு தாக்கல் செய்திருந்தால் எதிரிக்கு அறிவிப்பு வந்திருக்கும் என்றாலும் சரியல்ல.

9. எனக்கு முத்துமுருகன் யார் என்று தெரியாது என்று சாட்சி கூறிவிட்டு வீடு இடித்த பிறகுதான் தெரியும் என்று கூறினார். முத்துமுருகன் என்ன வேலை செய்கிறார் என்பது பற்றி எனக்கு தெரியாது. எதிரி பெருநாழியைச் சேர்ந்தவர் என்று ஊர்க்காரர்கள் கூறி

தெரிந்து கொண்டேன். எங்கள் ஊர்க்காரர்கள் பெருநாழிக்கு வரவேண்டும் என்றால் முத்துமுருகனின் வீட்டை தாண்டி தான் வர வேண்டும் என்றால் சரிதான்.

10. எதிரியானவர் JCB இயந்திரமும், லாரியும் வைத்து நல்லபடி தொழில் செய்து வருவாய் ஈட்டி வருவதால் அவரிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதெல்லாம் பொய். நான் கூறியபடி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(ஒம்./−திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.